
# அண்ணா நாற்பது

– கையறுநிலைக் கவிதை –



*இயற்றியவர் :*

**புலவர் சுந்தர சண்முகனார்**

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அண்ணா நாற்பது

[கையறுநிலைக் கவிதை]

ஆசிரியர்:

புலவர் சுந்தர சண்முகனார்

வெளியீடு:

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்

புதுச்சேரி.

# அண்ணா நாற்பது

ஆசிரியரின் நாற்பத்தேழாவது வெளியீடு
பிப்ரவரி, 1969.

உதவி :
திரு, ந. தங்கவேல் அவர்கள்
நியூ பேன்சி ஸ்டோர்,
கடிகார வணிகம்,
புதுச்சேரி.

விலை: 40 காசு.

கற்பகம் பிரிண்டர்ஸ், புதுச்சேரி-1.

# அறிஞர் அண்ணாதுரை வரலாறு

பல்லவப் பேரரசின் நல்ல தலைநகராய்த் திகழ்ந்த காஞ்சி புரத்தில், 1909-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் நடராசன் அவர்கட்கும் பங்காரு அம்மையார்க்கும் அரும்பெறல் மைந்தராய் அறிஞர் அண்ணாதுரை பிறந்தார்; உள்ளூரிலுள்ள பச்சை யப்பன் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரமும் அரசியலும் பயின்று 1935-ஆம் ஆண்டில் எம். ஏ. (M.A.) பட்டம் பெற்றார்.

அண்ணாதுரை அரசியல் உலகில் கால்வைக்குமுன்னரே, காஞ்சி நகராட்சி அலுவலகத்தில் கணக்கராயும் மற்றும் பள்ளி யாசிரியராயும் பணியாற்றியுள்ளார். தம் வாழ்க்கைத் துணைவியாக இராணியம்மையாரை மணந்துகொண்டார்.

அரசியல் உலகில் அடியெடுத்து வைக்கத் தொடங்கிய அண்ணாதுரை, முதல்முதலாக, பெரியார் ஈ. வே. இராமசாமியவர்கள் செல்வாக்குற்றிருந்த நீதிக்கட்சியில் சேர்ந்தார். பின்னர், பெரியார் ஈ.வே.ரா. அவர்களால் 1947-இல் அமைக்கப்பெற்ற திராவிடர் கழகத்தில் சேர்ந்து, அதன் பொதுச் செயலாளராகவும் 'விடுதலை' என்னும் இயக்க நாளிதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 1949-ஆம் ஆண்டு பெரியார் அவர்களோடு கருத்து வேறுபாடு கொண்டு 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் இயக்கம் (கட்சி) தோற்று வித்தார். அவரைப் பின்பற்றிய நூறாயிரக்கணக்கான தொண்டர்கள் 'அண்ணா அண்ணா' எனப் போற்றி அவரைத் தெய்வமாக வழிபட்டு வரலாயினர். 'அறிஞர்' என்னும் அரும்பெரும் பட்டமும் அவருக்குச் சூட்டப்பட்டது. தலைசிறந்த அரசியல் வல்லுநர் அவர்.

அறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் திறம்பெறப் பேசவும் எழுதவும் வல்லவர். அவர் எழுதிய நூற்கள் பல. ஓவியம், நாடகம் முதலிய கலைகளிலும் வல்லுநர் அவர். காட்சியிலும் பேச்சிலும்' எளியர், இனியர்; எவரையும் ஈர்க்கும் இயல்பினர். திராவிடநாடு காஞ்சி, ஹோம்லாண்ட் என்னும் இதழ்களும் நடத்தியுள்ளார்.

அறிஞர் தம் கொள்கைக்காக ஏழுமுறை சிறை சென்றுள்ளார். 1957-இல் காஞ்சிபுரம் தொகுதியில் நின்று தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1962-இல் அதே தொகுதியில் தோல்வியுற்றார்; பின் டில்லிப் பாராளுமன்ற இராச்சிய அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1967-இல் தென்சென்னையிலிருந்து டில்லிப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். உடனே விலகி, தமிழக மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுத் தமிழகத்தின் முதலமைச்சரானார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாவிற்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளது.

அவர் 1968-ஏப்ரல், மே திங்கள்களில் ரோம், அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் முதலிய நாடுகட்குச் சென்று நாட்டுப் பெருமையினை நாட்டி வந்தார். அமெரிக்காவில் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஐந்துநாள் தங்கித் திருக்குறள் வகுப்பு நடத்தினார். அதே ஆண்டு செப்டம்பர் திங்கள் நியூயார்க் சென்று புற்றுநோய்க்கு மருத்துவம் பெற்று நல முற்று வந்தார். மீண்டும் புற்றுநோயால் தாக்குண்டு சென்னையில் 1969 பிப்ரவரி 2-ஆம் நாள் நள்ளிரவு இறுதியெய்தினார்.

வரலாறு கண்டறியாத அளவில், பன்னூறாயிரவர் 'அண்ணா அண்ணா' என்று அலறிப் பதறி அழுது புலம்ப அண்ணாவின் உடலம் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டுச் சென்னை 'மெரினா' கடற்கரையில் அரசச் சிறப்புடன் அடக்கம் செய்யப்பட்டிருப்பது வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது.

அறிஞர் அண்ணா புகழ் வாழ்க!

☆

# அண்ணு நாற்பது

## தமிழ்த்தாய் வேட்டல்

அண்ணு துரையின் அரும்பிரிவால் வாடிடும்
எண்ணிலா மாந்தர் இடர்துடைக்க—அண்ணுமேல்
பண்ணுறு நாற்பது பாடல் பகர்ந்திடத்
தண்ணருள் செய்தமிழ்த் தாய்.

## அவை யடக்கம்

பொன்னூர் சங்கப் பொற்புறு நூற்களாம்
இன்ஞு நாற்பது இனியவை நாற்பதுபோல்
அண்ணு நாற்பது ஆக்கி யுள்ளேன்
அண்ணு வைப்பிரி ஆழ்துய ரதனுல்
எத்தனை வழுக்கள் இருக்குமோ
அத்தனை யும்பொறுத் தருள்புரிந் தேற்கவே!

## நூல்

1 அண்ணு அண்ணுவென் றலறியே நூ ருயிரவர்
உண்ணு வதுவறள உரக்கவழும் ஓலமதை
அண்ணு நீசெவிமடுத் தன்புரைகள் தாராயோ
அண்ணு நீகண்திறந் தருள்கனியப் பாராயோ.

2 மெரினு கடற்கரையின் மெத்தென்ற மணலறைக்குள்
அறிஞர் அண்ணுநீ அறிவுக்கோ யில்கொண்டாய்
ஒருநாள் இருநாளோ ஒவ்வொருநாள் தொறுமங்கே
திருநாள் கொண்டாடத் திரண்டெழுமால் மக்களினம்!

3 பவம்போக்கு வோமெனும் பண்டார சந்நதியோ
அவதார புருடரோ அல்லல்ல அண்ணு நீ
அவர்தமைப்போ லில்லா அண்ணுவாய் நீயிருந்தும்
எவர்தாமும் உனைத்தொழு தேத்தினரே எதனலே?

4 எக்காலும் கடவுள் எனஒருவர் இருந்ததிலை
மக்களுளே அறிஞரே மாறுவரவ் வாறென்றே
இக்காலம் சில்லோர் இயம்புவதை அண்ணுவால்
முக்காலும் உண்மை முடிபெனவே உணர்ந்தோமால்!

5 எத்தனை அறிஞர்கள் புலவர்கள்
இந்நாட்டில் சிறந்து வாழ்ந்தார்
எத்தனை துறவியர்கள் முனிவர்கள்
இந்நாட்டில் பொலிந்து வாழ்ந்தார்
எத்தனை வள்ளல்கள் மன்னர்கள்
இந்நாட்டில் மிளிர்ந்து வாழ்ந்தார்
அத்தனை தரத்தினரும் அண்ணுவின்
புகழெல்லை அடைந்த துண்டோ?

6 நாத்திகத்தின் பெருந்தலைவர் நம்பெரியார் ராமசாமி
ஆத்திகத்தின் அருந்தலைவர் அந்தணராம் ராஜாஜி
ஏத்துபுகழ் இருவரையும் இருகண்க ளாய்க்கொண்டாய்
நாத்திகரா ஆத்திகரா நவின்றிடுவாய் அண்ணுநீ!

7 மன்னர் குடும்பமதில் மாணப் பிறக்க வில்லை
துன்னுஞ் செல்வமிகு குடியினில் தோன்ற வில்லை
இன்னும் எவ்வாய்ப்பும் இயையப் பிறக்க வில்லை
என்ன வகையாலே இத்துணை பெருமை பெற்ருய்?

8 குறுமுனியே போலக் குறையும் குறளுருவம்
குறளதுவே மானக் குலவும் குறளுருவம்
முறுவலொளி யாண்டும் முகிழ்க்கும் அருளுருவம்
மறுவறுநற் றமிழர் மகிழும் பொருளுருவம்.

9 உருச்சிறிய அச்சாணி உருள்விக்கும் பெருந்தேரை
உருச்சிறிய ஊற்றங்கால் உண்பிக்கும் உலகோரை
உருச்சிறிய அணுப்பிளவே உண்டாக்கும் உயராற்றல்
உருக்குறிய நம்மண்ணு உயர்ந்துவிட்டார் இமயம்போல்!

10 அண்ணுவை வணங்க ஆருயிர்தந் தார்பலரால்
அண்ணுவை இறைஞ்ச அழிபசியுற் ருேர்பலரே
அண்ணுவை ஏத்த அருந்துயருற் ருேர்பலராம்
அண்ணுவின் மகிமை யாதென்றே அறிந்திலமே!

11 அரசியல் அறிஞர் என்கோ
அந்தமிழ் அறிஞர் என்கோ
வரிசைசேர் ஓவி யத்தில்
வரைந்திடு காவி யத்தில்
பரவுறு நாட கத்தில்
பணிகளில் அறிஞர் என்கோ
விரவிய துறையில் எல்லாம்
வியத்தகு அறிஞர் உண்மை!

12 எந்த உலகினில் இத்தனை தம்பியர்கள்
இருப்பர் என்றேகினுய்
எந்த உலகினில் இத்தனை ஆர்வலர்கள்
இருப்பர் என்றுசென்ருய்
எந்த உலகினில் இத்தனை தொண்டர்கள்
இருப்பர் என்றுபோனுய்
எந்த உலகினில் இத்தனை சிறப்புக்கள்
எய்தலாம் என்றகன்ருய்

13 செல்வம் நிலையாது சென்றிடும் இன்பம் என்றே
சொல்வது முற்றிலுமே சொந்தப் பட்டறி வினிலே
நல்ல தமிழர்கள் நன்ருய்க் கண்டு விட்டார்
செல்வ மாம்அண்ணு சென்றே மறைந்து விட்டார்.

14 மெரினுவின் கடற்கரையில் மெல்லென்ற காற்றிடையே
ஒருநூறு சொற்பொழிவும் உளங்கவர ஆற்றியுளாய்
ஒருநூறு கோடிமக்கள் உளங்குளிரக் கேட்டுவந்தார்
மெரினுவின் மேல்வந்து மீண்டுமுரை தருவதென்ருே?

15 தமிழர் தளபதியே தளர்விலாத் தாளாளா
அமிழ்தே அருநிதியே அறிவுக் களஞ்சியமே
கமழு நற்பல்கலைக் கழகமே கதிரொளியே
இமிழ்கடல் சூழுலகில் எங்குனைக் காண்போமால்!

16 சிரித்த முகமெங்கே சிந்தனைகூர் நெஞ்செங்கே
கருத்து நயங்கொழிக்கும் கற்பனைசால் நாவெங்கே
விரித்துப் பொருள்வரையும் விரைவுமிகு கையெங்கே
கருத்தைக் கவர்ந்தீர்க்கும் கனிவுசெறி கண்ணெங்கே

17 கற்பனையின் பேரூற்றே கலைகல்விக் களஞ்சியமே
கனிவு மிக்க
நற்பண்பின் கொள்கலமே நடமாடும் நூலகமே
நாவில் வல்லோய்
அற்புமிகு அண்ணுவே அடக்கத்தில் ஆழ்கடலே
அறிஞர் ஏறே
பொற்புமிகு அமைதியினில் பொன்மலையே புகழ்வீசிப்
போய்விட் டாயே!

18 முடியுடை மூவேந்தர் முத்தமிழ்நா டாளுகையில்
படையெடுத் துவந்தார்கள் பன்ஞட்டு மன்னரிங்கே
அடிமைத் தளையில்யாம் அறுநூருண் டாயிருக்க
விடிவெள் ளியாயண்ணு விரைந்தெழுந்தாய்
தமிழ்விண்ணில்.

19 தமிழகத்தில் தமிழ்மொழியே தனியாட்சி மொழியாகத்
தங்கச் செய்தாய்
தமிழகம்தன் திருப்பெயராய்த் 'தமிழ்நாடு' எனும்பெயரே
தாங்கச் செய்தாய்

தமிழகத்தில் பல்வளமும் தமிழ்க்கலைகள் பற்பலவும்
தளிர்க்கச் செய்தாய்
தமிழகத்தின் பெருமையெலாம் தரையெங்கும் கால் கொண்டு
தழைக்கச் செய்தாய்.

20 சாதி சமயச் சாத்திரக் குப்பைகளைச்
சாடித் தீர்த்தாய்
நீதி வழுவா நெறிமுறைக் கோட்பாடு
நிலவச் செய்தாய்
ஓதி யறிந்தே உயர்ந்த பகுத்தறிவை
உணரச் செய்தாய்
கோதில் புரட்சி குன்றா மறுமலர்ச்சிக்
கொள்கை கண்டாய்.

21 கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போய்விடவே
கழகம்பல கண்டனை
புண்மூடி வையாமல் புரையோடச் செய்யாமல்
புன்மைகளைக் கீறினாய்
தண்மையுறு வழியினிலே தகுபுரட்சி பலசெய்து
தமிழர்தம் நெஞ்சிலே
வண்மைதரு நற்கருத்து வளங்கொழிக்க வைத்தனையே
வணங்குகிறோம் அண்ணலே!

22 சிரிக்க மட்டிலுமே சிலர்பேசுவர் சிந்திக்கச் சிலர்பேசுவர்
சிரிக்க ஒருகாலும் சிந்திக்க ஒருகாலும் சிலர்பேசுவர்
சிரிக்கவும் அதேநேரம் சிந்திக்கவும் நின்பேச்சு செய்திடுமே
சிரிக்கவும் ஆழ்ந்தாழ்ந்து சிந்திக்கவும் எம்மண்ணா செய்வதென்றோ?

23 அண்ணாசொற் பொழிவென்றால் அலைகடலும் ஓய்ந்துவிடும்
அண்ணாவின் பேச்சென்றால் அழுதபிள்ளை வாய்சிரிக்கும்
அண்ணாசொல் லாற்றுங்கால் ஊசிவிழும் ஒலிகேட்கும்
அண்ணாவின் சொற்கேட்டே அயலாரும் வாய்பிளப்பர்.

24 அண்ணாவின் சொற்கேட்கின் அலிகளும்ஆண்
மைபெறுவர்
அண்ணாவின் மொழிகேட்கின் அயர்நரம்பும்
முறுக்கேறும்
அண்ணாவின் உரைகேட்கின் அரையுடலும் எழுந்தாடும்
அண்ணாவின் ஒலிகேட்கின் அறுத்தகட்டை
யுந்துளிர்க்கும்.

25 பெருமுனிவர் வாழும் பேரடவி யதனிடையே
ஒருதுறையில் மானுடன் உறுபுலிநீர் பருகுமெனத்
திருநூலில் கற்றதைத் தெளிந்துகொண்டோம்
இஞ்ஞான்றே
இருகருத்தால் முரணாவோர் இணைந்திடுவர் அண்ணாமுன்!

26 சிரிப்பினால் முப்புரத்தைச் சிவபெருமான் சுட்டெரித்தார்
சிரிப்பினால் நம்மண்ணா செந்தழலை அணைத்திடுவார்
நெருப்புப் பொறிபறக்க நிலைமாறி வந்தவரும்
சிரிப்பு முகத்தோடு சென்றிடவே செய்திடுவார்.

27 அண்ணாவைக் காணின் அங்கண் ஒளிபெறும்
அண்ணாசொல் கேட்கின் அஞ்செவி குளிருமால்
அண்ணாசீர் பேசின் அணிநா வினிக்குமால்
அண்ணாவொடு பழகின் ஆருயிர் தளிர்க்குமால்.

28 எத்தனையோ கடவுளர்கட் கிந்நாட்டில் திருவிழாக்கள்
எடுத்த யர்ந்தோம்
எத்தனையோ கடவுளரை இந்நாட்டில் ஊர்வலமாய்
ஏந்தி வந்தோம்
எத்தனையோ கடவுளர்கட் கிந்நாட்டில் பூசனைகள்
இயற்றி யுள்ளோம்
அத்தனை நங் கடவுளரும் அண்ணாபோல் பெருங்கூட்டம்
அறிந்த துண்டோ!

29 அஞ்செழுத்து மந்திரமும் ஆறெழுத்து மந்திரமும்
அதன்மேல் எட்டாய்
விஞ்செழுத்து மந்திரமும் விரித்தொலிப்பார் தம்மைவிட
'அண்ணா' வென்றே
கொஞ்சியெழும் மூன்றெழுத்தாய்க் குலவிடுநன்
மந்திரத்தைக் கூறு வோரே
மிஞ்சிடுவர் இந்நாட்டில் மிகையல்ல இக்கூற்று
மிக்க உண்மை!

30 ஒருகுடும்பில் ஓரொருவர் ஒருசிலர்க்கே அண்ணாவாய்
உறைவ துண்டால்
ஒருகுடும்பத் தண்ணாவும் உடன்பிறந்தா ருடன்பகைதான்
உற்றுச் செற்றுத்
தெருவரைக்கும் வந்துதலை தெறிக்கப்போர் செய்வதுண்டு
தேரின் நீயே
ஒருநாட்டின் அண்ணாவாய் உளங்கலந்த அண்ணாவாய்
உற்ற தெங்ஙன்?

31 ஒருநல்ல உருவுடனே ஓரேஓர் அண்ணாவாய்
உதித்தது போதாதுகாண்
ஒருகோடி உருவுடனே ஒருகோடி யண்ணாவாய்
உதித்துமே நீயிருந்தால்
ஒருகோடி தம்பியரும் ஒருவர்க்கோர் அண்ணாவை
உடன்கொண்டு சென்றிருப்பர்
ஒருஞாயி றேபோல ஓரேஓர் அண்ணாவாய்
உதித்தனை என்செய்குவோம்!

32 அண்ணாவும் இறக்க வில்லை அண்ணாவைத்
துறக்க வில்லை
அண்ணாவை மறைக்க வில்லை அண்ணாவை
மறக்க வில்லை
அண்ணாவை இழக்க வில்லை அனல்மூட்டி அழிக்கவில்லை
அண்ணாதான் கடலோ ரத்தில் அமைதியுடன்
இருக்கின் றாரே!

33 இருக்கின்றார் எங்கள் அண்ணா இளைஞர்நெஞ் சங்களிலே
இருக்கின்றார் எங்கள் அண்ணா இனியதமிழ் உளங்களிலே
இருக்கின்றார் எங்கள் அண்ணா இயற்றியுள நூற்களிலே
இருக்கின்றார் எங்கள் அண்ணா இப்பெருநா
டெங்கணுமே!

34 அண்ணா நீபிறந்த அதுதான் நல்லூராம்
அண்ணா நீவாழ்ந்த அதுவே நன்னாடாம்
அண்ணா நீமறைந்த அஃதே நற்கோயில்
அண்ணா தொடர்புற்ற அனைத்தும் உயர்ந்தனவால்!

35 பல்லவர் தலைநக ராயமைத் தாண்டதால்
பாரிற் சிறந்தது காஞ்சி
அல்லலில் கோயில் அறநிலை யங்களால்
அன்பின் மிக்கது காஞ்சி
பல்வகைக் கலைகள் பரவிப் படர்ந்ததால்
பண்பில் நிறைந்தது காஞ்சி
நல்லவர் அண்ணா நலனுறப் பிறந்ததால்
நாட்டில் உயர்ந்தது காஞ்சி.

36 தம்பியர் உள்ளனர் தமிழ்மொழி காத்திடுவர்
எனுந்தருக்கோ
தம்பியர் உள்ளனர் தமிழரினம் ஓம்பிடுவர்
எனுஞ்செருக்கோ
தம்பியர் உள்ளனர் தமிழ்நாடு புரந்திடுவர்
எனுங்குறிப்போ
நம்பிநீ எதனால் நானிலம்விட் டகன்றனையால்
நவின்றிடுவாய்.

37 எத்தனையோ பணிகள்தமை யாரைநம்பி விட்டகன்றாய்
எங்கள் அண்ணா
எத்தனையோ பொறுப்புகளை எங்களிடம் ஒப்படைத்தாய்
எங்கள் அண்ணா

இத்தனை நற் கடமைகளும் யார்செய்வர் நீயின்றி
எங்கள் அண்ணா
அத்தனையும் முடிவுபெற அருவுருவாய் அருள்புரிவாய்
அருமை அண்ணா!

38 புற்றுநோய் பின்னே புல்லன் காலன் மெல்ல
ஒற்றிச் சென்றே உயிரை உறிஞ்சி விட்டான்
புற்றுநோய் தனையும் பொல்லாக் காலன் தனையும்
முற்றும் விரட்ட முடியா மூட ராணோம்.

39 நாடுபல சென்றிட்டு நற்றமிழின் பெருமைதனை
நாட்டி வந்தாய்
பீடுபெறு பாரதநற் பெருநாடு முழுவதுமே
பெருமை பெற்றாய்
நாடுகண்டு பூரிக்க நல்லமுத லமைச்சேற்று
நன்மை செய்தாய்
வீடுவிட்டுக் கூடுவிட்டு வீரத்தமிழ் உள்ளங்களாம்
வீடு புக்காய்.

40 அண்ணாவிட் டகன்றதனால் அரற்றுதலே வேண்டாவாம்
அண்ணாவாய் நடைமுறையில் அனைவருமே மாறிவிடின்
அண்ணாக்கள் பலகோடி ஆகிடுவர் தமிழகத்தில்
அண்ணாவின் புகழுடனே அவர்கொள்கை வாழ்ந்திடுமே!

☆

## சுந்தர சண்முகனாரின் நூற்கள்

| | | |
|---|---|---|
| 1 | வீடும் விளக்கும் ... ... ... ... | 1-25 |
| 2 | மலர் மணம் ... ... ... ... ... | 3-00 |
| 3 | வாழும் வழி ... ... ... ... ... | 1-75 |
| 4 | வள்ளுவர் இல்லம் ... ... ... ... | 3-00 |
| 5 | பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) ... | 0-75 |
| 6 | செந்தமிழாற்றுப் படை ... ... ... | 0-50 |
| 7 | வாழ்க்கை ஓவியம் ... ... ... ... | 0-40 |
| 8 | தமிழர் கண்ட கல்வி... ... ... ... | 3-00 |
| 9 | எழுத்தாளர் துணைவன் ... ... ... | 1-25 |
| 10 | இன்ப வாழ்வு ... ... ... ... | 2-50 |
| 11 | போர் முயற்சியில் நமது பங்கு ... ... | 0-30 |
| 12 | தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசு பெற்றது) ... | 8-00 |
| 13 | திருக்குறள் தெளிவு (குறள்—முழு உரை நூல்) ... | 2-00 |
| 14 | அண்ணா நாற்பது ... ... ... ... | 0-40 |
| 15 | History of Tamil Lexicography ... ... | 1-50 |

கிடைக்குமிடம் :

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

61-C, வைசியர் தெரு, புதுச்சேரி-1.

PONDICHERRY-1.